Khadi Emporium, Madurai

* 262 *Q*.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether the Khadi Emporium at Madurai has started functioning; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. எம். தேவராசன்: மதுரையில் கதர் விற்பனை நிலையம் ஏற்படுத்த கதர் வாரியம் ஒரு இடத்தை வாங்கியுள்ளதாகத் தெரிகிறதே, என்ன விலையில் வாங்கப்பட்டது? அந்த இடத்திற்கு வரலாற்று முக்கியத்துவம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மதுரை மேலமாசித் தெரு 271–எ என்ற கட்டிடத்தை கதர் வாரியம் வாங்கியுள்ளது. அந்தக் கட்டிடத்தை வாங்குவதற்கு ரூ.1·31 லட்சமும், அதைப் புதுப்பித்து செப்பனிட ரூ.1·69 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. மகாத்மா காந்தி அவர்கள் தமிழ்நாட்டிற்கு வந்தபோது அந்த இடத்தில்தான் முதன் முதலில் அரை ஆடை அணிவதற்கு முடிவு செய்தார் என்கிற வரலாற்று அடிப்படையில் அதை அந்த நினைவுச் சின்னமாக ஆக்கவேண்டுமென்ற முறையில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: வருபவர்கள் வந்து பார்த்துச் செல்வதற்குரிய இடமாக அதை அமைக்கப்போகிறார்களா? அல்லது அங்கே கதர் போன்ற பொருள்களை விற்பனை செய்வதற்கும் அந்த இடத்தில் ஏற்பாடு செய்யப்போகிறார்களா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அந்தக் கட்டிடத்தின் முகப்புப் பகுதியில் ஏற்பட்டிருகிற பழுதுகளை மாத்திரம் செப்பனிடுவதற்கும், அந்தக் கட்டிடத்தின் பின் பகுதியை மாற்றி கட்டி அங்கே கதர் விற்பனை நிலையத்தை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

கைக்குத்தல் அரிசி நிலையங்கள்.

*263.—வினா: திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1973 டிசம்பர் மாதத்தில் கதர் கிராமத் தொழில்கள் கமிஷனுக்கு போதிய நெல், மாநில அரசு, வழங்காத காரணத்தால் கைக் குத்தல் அரிசித் தயாரிப்பு நிலையங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மூ. கண்ணப்பன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அங்கு உற்பத்தியாகும் கைக் குத்தல் அரிசி எவ்வாறு வினியோகம் செய்யப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மூ. கண்ணப்பன் : கூட்டுறவு சங்கங்களின் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு, கூட்டுறவு சங்கங்களின் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது. அது அல்லாமல் கிராம கைத்தொழில் வாரியத்தின் விற்பனை நிலையங்களின் மூலமாகவும் விற்பனை செய்யப்படுகிறது.

திரு. எம். சுரேந்திரன் : இந்தக் கைக்குத்தல் அரிசி நிலையங்கள் ஒரு சந்தர்ப்பத்தில் வளர்வதைப்போன்ற தோற்றம் இருந்தது. இப்போது படிப்படியாகக் குறைந்து உயிரை வைத்துக்கொள்வதற்குக் கூட முடியாத தோற்றம் இருக்கிறதே, அதற்குக் காரணம் என்ன ? இவை சிறந்த முறையில் வளர்வதற்கு அரசாங்கம் ஏற்படுமா செய்யுமா ?

மாண்புமிகு திரு. மூ. கண்ணப்பன் : அப்படிப்பட்ட நிலைமை கிடையாது. ஏற்கனவே இருந்த சங்கங்களின் எண்ணிக்கை இப்போது அதிகமாகியிருக்கிறது. மேலும் அந்தச் சங்கங்களே 73, 74-ஆம் ஆண்டுகளில் வெளியே நெல்லைக் கொள்முதல் செய்துகொள்வதற்கும் விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சங்கங்கள் வளர்ந்தே வருகின்றன.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : அந்தச் சங்கங்களுக்கு போதிய நெல் கொடுப்பதாகச் சொன்னார்கள். திருப்பூரில் இருக்கிற நிலையத்திற்கு நெல் கிடைக்கவில்லை. கைக்குத்தல் அரிசியில் பி1 சத்து இருக்கிறது. இது நரம்பு வியாதிகளுக்கு மிகவும் தேவையாக இருப்பதால் கைக்குத்தல் அரிசியை சாப்பிடச் சொல்லி டாக்டர்களும் அட்வைஸ் செய்கிறார்கள். ஆகவே கூடுதலாக கைக்குத்தல் அரிசி மக்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மூ. கண்ணப்பன் : திருப்பூர் பகுதியைப்பற்றிச் சொன்னார்கள். அதுபற்றி குறிப்பு இல்லை. ஆயினும் பரவலாக எல்லா இடங்களிலும் உள்ள மக்களுக்கு கைக்குத்தல் அரிசி கிடைக்க வேண்டுமென்றுதான் அங்கங்கே இந்தக் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்த

1975 மார்ச் 10]

லாம் என்ற விதிமுறைகளை வைத்திருக்கிறோம். எந்தப் பகுதியில் மக்கள் விரும்புகிறார்களோ அந்தப் பகுதியில் கதர்வாரியத்தின் மூலம் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க ஏற்பாடு செய்யப்படும்.

சேலம் மாவட்டத்தில் அரிசனங்களுக்கு வீட்டுமனைகள்.

*264 வினா.—திரு. வ. முத்து: மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரிசனங்களுக்காக சேலம் மாவட்டத்திற்கு வீட்டு மனைக்காக நடப்பு ஆண்டில் ஒதுக்கிய தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ந. இராசாங்கம்: ரூபாய் 1.50 லட்சம்.

*265 வினா.—திரு. வ. முத்து: மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், திருச்செங்கோடு வட்டத்தில் தாழ்த்தப்பட்டோர் வீடு கட்டும் கழகத்தின் சார்பாக தற்போது எந்த எந்த இடங்களில் வீடுகள் கட்டப்படவிருக்கிறது ?

மாண்புமிகு திரு. ந. இராசாங்கம்: சேலம் மாவட்டம், திருச் செங்கோடு வட்டத்தில், உஞ்சனை கிராமத்தில் வீடுகள் கட்டும் பணியை தனது முதல் கட்ட திட்டத்தில் அரிசன வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம் மேற்கொண்டுள்ளது.

திரு. வ. முத்து: தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திற்கு வீட்டு மனைக்காக ஒதுக்கிய தொகை போதாது என்று சொல்லப்படுகிறது. அதை அரசு அதிகப்படுத்த ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ந. இராசாங்கம்: ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இவ்வளவு வீடுகள் என்பதாக முன்கூட்டியே தீர்மானித்து விடுகிறார்கள். அந்த வீடுகளுக்கான தொகை ஒதுக்கப்பட்டுவிடுகிறது. சேலம் மாவட்டம் மட்டுமல்ல—ஒவ்வொரு மாவட்டத்திலும் இன்னும் அதிகம் வேண்டு மென்றுதான் கேட்கிறார்கள். இவை முடிந்தபின் அதையும் பரிசீலிக்கலாம்.

திரு. வ. முத்து: திருச்செங்கோடு உஞ்சனை கிராமத்தில் அரிசனங் களுக்காகக் கட்டப்படுகிற வீடுகள் எத்தனை ? அதன் மதிப்பு என்ன ?

மாண்புமிகு திரு. ந. இராசாங்கம்: திருச்செங்கோடு உஞ்சனை கிராமத்தில் 81 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டிருக்கிறது.